கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், கும்பகோணம்
முன்னிலை. திருமதி. J. ராதிகா, M.A.,M.L.,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (விரைவு நீதிமன்றம்),
கும்பகோணம்
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை

**அ.வ.எண்.100/2025 ல் இ.ம.எண். 6/2026**

கண்ணையன், சிறப்பு அதிகார முகவர்
கோவிந்தராஜன் மூலமாக. .... மனுதாரர்/வாதி

/எதிர்/

1) மதியழகன்.
2) செந்தில்குமார்
3) ராமதாஸ்
4) ஜெயகுமார்
5) சக்கரவர்த்தி
6) ஜெயவேல்
7) நிர்வாக அதிகாரி, அருள்மிகு ஆதி கும்பேஸ்வரர் கோவில்,
கும்பகோணம். ...எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 12.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. கே.ஆர்.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 4, 5 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. சி.நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ரஞ்சித்குமார் அவர்கள் முன்னிலையாகியும் 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. டி.எம். வைத்தியநாதன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இம்மனுவானது, ஆர்டர் 7 ரூல் 14 ஏ மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன்கீழ், மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்க உத்தரவிட கோரப்பட்டுள்ளது.


JAYARAMAN RATHIKA
Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:42:23 +0530

2) மனுதாரர் / வாதி தன் பிரமான பத்திரத்தில், தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்து கொடுத்த சண்முகசுந்தரம் என்பவரின் தாய் மாமா சுப்ரமணியன் என்பவர் தாவா சொத்தை பொறுத்து இரண்டு பதிவான பெந்தக பத்திரங்களை மேத்தா என்பவருக்கு எழுதி கொடுத்துள்ள விவரம் தற்போது தெரிய வந்ததாகவும் அதன் அடிப்படையில் தாவா சொத்து மேற்படி சண்முகசுந்தரத்தின் தாய் மாமா குடும்பத்தின் சொத்து என்பது தெளிவுபடும் என்றும் தாவா சொத்து 7–ம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமானது என பிரதிவாதிகள் தரப்பில் கட்சி செய்து வரும் நிலையில், மேற்படி கட்சி சரியானதல்ல என்பதை நிரூபிக்கவும் தாவா சொத்து மேற்படி ஆவணங்களின் அடிப்படையில், உரிய நபர்களால் வாதிக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தவும் வேண்டி, அந்த பெந்தக பத்திரங்களின் சான்று நகல்களை மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே அந்த ஆவணங்களை ஏற்க உத்தரவிட வேண்டுமென கோரியுள்ளார்.

3) மாறாக 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள், தாக்கல் செய்துள்ள எதிர்உரையில், மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் இருதரப்பு விசாரணை முடிந்து வாதுரைக்காக வழக்கு போடப்பட்டுள்ள நிலையில் வேண்டுமென்றே காலம் கடந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் / வாதி இதுநாள் வரை நான்கு வழக்கறிஞர்களை மாற்றி மாற்றி வழக்கினை நடத்தி வருகிறார் என்றும் ஒவ்வொரு முறையும் இதுபோன்று காலம் கடத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் எனவே, மனுவை அனுமதிக்கக்கூடாதென்றும் அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

4) 7ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்உரையில் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், இந்த வழக்கானது ஆரம்பத்தில் கும்பகோணம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.254/2014 ஆக தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்றும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கினை மனுதாரர் இழுத்தடித்து வருகிறார் என்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கில் வாதுரை கேட்கப்பட்ட நிலையில், வழக்கு

இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது என்றும் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் 3ம் நபர் சம்பந்தப்பட்டவைகளாக காணப்படுகின்றன என்றும் ஆவணத்தில் கண்ட நபர்கள் தான் மேற்படி ஆவணங்கள் குறித்து சாட்சியம் அளிக்க இயலும் என்றும் எனவே மனுவை அனுமதிக்க இயலாது என்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

5) இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

6) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகளை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது, வாதி /மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்து கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார் என்பதும், அசல் வழக்கில் இருதரப்பு விசாரணை முடிவுற்று வாதுரை கேட்க வேண்டி வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பில் இம்மனுவை தாக்கல் செய்து, மனுவுடன் தாக்கல் செய்துள்ள சார்பதிவாளர் சான்றிட்ட பெந்தக பத்திர ஆவணங்களை ஏற்க உத்தரவிட கோரப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் குறித்து மனுவில், தாவா சொத்தை வாதிக்கு கிரயம் கொடுத்த சண்முகசுந்தரம் என்பவரின் தாய் மாமா சுப்ரமணியன் என்பவர் தாவா சொத்தை பொறுத்து இரண்டு பதிவான பெந்தக பத்திரங்களை மேத்தா என்பவருக்கு எழுதி கொடுத்துள்ளதாகவும் அதன்படி தாவா சொத்து மேற்படி சண்முகசுந்தரத்தின் தாய் மாமா குடும்பத்தின் சொத்து என்பது தெளிவுபடும் என்றும் தாவா சொத்து 7–ம் பிரதிவாதி கோவிலுக்கு சொந்தமானது அல்ல என்பதையும் தாவா சொத்து உரிய நபர்களால் வாதிக்கு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை தெளிவுபடுத்தவும் வேண்டி, அந்த பெந்தக பத்திர சான்றிட்ட ஆவணங்களை ஏற்க உத்தரவிட கோரப்பட்டுள்ள நிலையில், எதிர்தரப்பில் வேண்டுமென்றே காலம் கடத்தும் நோக்கில் தற்போது இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும் எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரப்பட்டுள்ளது. இருப்பினும் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல என எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்படாத நிலையிலும், வாதி அசல்



JAYARAMAN RATHIKA Digitally signed by JAYARAMAN RATHIKA Date: 2026.03.13 10:42:35 +0530

வழக்கில் தன் தரப்பு கட்சியான, தாவா சொத்து அவரால் உரிய தகுதிபடைத்த நபரிடமிருந்து கிரயம் பெறப்பட்டது என்பதை தெளிவுபடுத்திடவும் வேண்டி, தாவா சொத்து சம்பந்தமாக கடந்த 1971 மற்றும் 1973ம் ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள பெந்தக பத்திரங்களின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், வாதியின் வழக்கினை தெளிவுபடுத்தி நிரூபிக்க அவருக்கு ஒரு வாய்ப்பு அளிப்பதே சரியானதாக அமையும் என இந்நீதிமன்றம் முடிவு கண்டு, மேற்படி ஆவணங்களை அதன் உண்மை தன்மை, ஏற்பு தன்மை மற்றும் நிரூபணத்தன்மைக்குட்பட்டு ஏற்க தீர்மானித்து இந்த மனுவை அனுமதித்து அந்தபடிக்கு இந்த பிரச்சனைக்கு முடிவு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அதன் உண்மை தன்மை, ஏற்பு தன்மை மற்றும் நிரூபணத்தன்மைக்குட்பட்டு ஏற்க உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவில்லை.

இந்த உத்தரவு இன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 12–ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறிய என்னால் பகரப்பட்டது.

JAYARAMAN RATHIKA

Digitally signed by JAYARAMAN RATHIKA
Date: 2026.03.13 10:42:42 +0530

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
விரைவு நீதிமன்றம், கும்பகோணம்.